# T20 Current Affairs

## for

# TNPSC

## March - 2022

Towards Your Success

**THULIRR IAS ACADEMY**

**# 1923 B, H Block 2nd Street, 12th Main Road,**

**Anna Nagar West, Chennai – 40**

**http://thulirracademy.in/ | Mobile # +91 9445065552 | Telegram: Thulirr Current Affairs**

# Table of Contents

தமிழக நிகழ்வுகள் ....3
வேளாண் நிதிநிலை அறிக்கை - **2022-2023** ....8
இந்திய நிகழ்வுகள் ....9
திருவிழா ....10
பொருளாதாரம் ....10
உலக நிகழ்வுகள் ....11
சுற்றுச்சூழல் ....11
அறிவியல் & தொழில்நுட்பம் ....12
முக்கிய நபர்கள் & நியமனங்கள் ....13
திட்டம் ....13
மாநாடுகள் ....14
பாதுகாப்பு ....15
கூட்டுப்பயிற்சி ....15
விருதுகள் ....16
விளையாட்டு நிகழ்வுகள் ....16
புவிசார் குறியீடு ....17
புத்தகம் ....17
முக்கிய தினம் ....18

**T20 Monthly Current Affairs Available in our Website**

**Click here to FREE download**

http://www.thulirraacademy.in/currentaffairs.php?ca_category=T20-T



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## தமிழக நிகழ்வுகள்

- **நான் முதல்வன் திட்டம்**
  - தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 'நான் முதல்வன்' திட்டத்தை தொடங்கி வைத்தார். மாணவர்கள், இளைஞர்களை அனைத்திலும் முதல்வனாக மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.
- **'உங்களில் ஒருவன்' புத்தகம்**
  - தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதிய 'உங்களில் ஒருவன்' புத்தகத்தை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி வெளியிட்டார்.
  - இது மு.க. ஸ்டாலின் வாழ்க்கைப் பயணம் குறித்த புத்தகத்தின் முதல் பாகம் ஆகும்.
- **துபையில், தமிழகத்திற்கு ரூ.2,600 கோடி முதலீட்டுக்கு ஒப்பந்தங்கள்**
  - நான்கு நாள் பயணமாக துபை மற்றும் அபுதாபி சென்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், அங்குள்ள பல்வேறு முதலீட்டாளர்களைச் சந்தித்துப் பேசினார். மேலும், தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில், ரூ.2500 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் பரிமாறிக் கொள்ளப்பட்டன.
- **தெருவிலங்குகளுக்கான ஆம்புலன்ஸ்**
  - தெருவிலங்குகளுக்கான இந்தியாவின் முதல் ஆம்புலன்ஸ், சென்னையில் தொடங்கப்பட்டது.
  - இத்திட்டத்தை, சர்வதேச விலங்கு நல அமைப்பான "ஃபோர் பாவ்" மற்றும் இந்தியாவின் புளூ கிராஸ் இணைந்து தொடங்கியுள்ளது.
- **உலகிலேயே உயரமான கட்டடத்தில் தமிழகம் குறித்த காட்சிப் படம்**
  - துபையிலுள்ள, உலகிலேயே உயரமான 2217 அடி உயரம் கொண்ட புர்ஜ் கலீஃபா கோபுரத்தின் மீது ஒளிபரப்பப்பட்ட தமிழகம் பற்றிய காட்சிப் படத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்.
- **மூவலூர் ராமாமிர்தம் உதவித் திட்டம் மாற்றியமைப்பு**
  - இந்த திட்டம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டமாக மாற்றியமைக்கப்படுகிறது என நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அறிவித்தார்.
  - கல்வியே நிரந்தரச் சொத்து என்ற உயரிய நோக்கில்தான் "தாலிக்கு தங்கம் வழங்கக்கூடிய திட்டம்" "6 முதல் 12 ஆம் வகுப்புவரை உள்ள அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் உதவித் தொகை வழங்கும் திட்டமாக" மாற்றியமைக்கப்பட்டுள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- தமிழக முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியால் தொடங்கப்பட்ட 1989-ல் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் முதன்முதலில் 5 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.
- பிறகு, 2009 ஆம் ஆண்டில் அது 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.
- பின்னர் 2011இல் இத்திட்டத்தவகையை 50,00 ஆக உயர்த்தியும் தாலிக்கு 4 கிராம் தங்கமும் சேர்த்து முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் வழங்கப்பட்டது. 2016இல் 8 கிராம் தங்கமாக உயர்த்தி வழங்கப்பட்டது.

❖ **"பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டம்"**

- ஆதிதிராவிடர் பழங்குடியின பெண் குழந்தைகளின் கல்வித் தரத்தை உயர்த்த பெண்கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர், பழங்குடியின பெண் குழந்தைகளின் பள்ளிச் சேர்க்கையை 100 விழுக்காடாக உறுதிப்படுத்திடும் நோக்கத்தோடு "பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இதன்படி 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியின பெண் குழந்தைகளுக்கு மாதமாதம் ஊக்க உதவித்தொகை வழங்கப்படுகிறது. பழங்குடியின மாணவிகளைப் பொறுத்த வரையில் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- 6-ம் வகுப்பில் சேர்ந்து கல்வி பயிலும் மாணவியர் கல்வியைத் தொடரவும் ஊக்கத்தொகையானது வழங்கப்படுகிறது.
- தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித்திட்டம், ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண உதவித்திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித்திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம் உள்ளிட்ட திட்டங்களும் நடைமுறையில் உள்ளன

❖ **திருக்குறள் தேசிய நூல் மாநாடு**

- தமிழ் இந்திய ஒன்றிய ஆட்சி மொழி, திருக்குறள் தேசிய நூல் மாநாடு சென்னை தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது.

❖ **மிளகு, சாதிக்காய், கிராம்பு ஆகியவற்றுக்கான மரபணு வங்கி**

- மிளகு, சாதிக்காய், கிராம்பு ஆகியவற்றுக்கான மரபணு வங்கி நீலகிரி, கொடைக்கானல், கொல்லிமலை, குற்றாலம், ஏற்காடு, ஜவ்வாது மலைகளில் உள்ள அரசு தோட்டப்பண்ணைகளில் உருவாக்கப்பட உள்ளது.

❖ **தரம் உயர்த்தப்பட்ட உணவுப் பூங்காக்கள்**

- தேனி, திண்டிவனம், மணப்பாறையில் தரம் உயர்த்தப்பட்ட உணவுப் பூங்காக்கள் அமைக்கப்படும்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **தமிழ்நாடு அரசு தரவுக் கொள்கை 2022**
  - மாநில அளவிலான தரவை கண்காணிக்க தலைமை செயலாளர் தலைமையிலான குழு அமைக்கப்பட்டுள்ளது.
  - தமிழ்நாடு இ.கவர்னன்ஸ் நிறுவனத்தின் தலைவராக கொண்ட குழு இதிட்டத்தை நடைமுறைபடுத்துவதற்கான வழிகாட்டுதலை வழங்கும்.
  - TNeGA-யின் தலைமை செயல் அதிகாரி, மாநில தலைமை தரவு அதிகாரியாக செயல்படுவார்.
- **திருக்குறள், ஒரு புளியமரத்தின் கதை நூல்: முதல்வர் வெளியீடு**
  - உலகப் பொதுமறை என போற்றப்படும் திருக்குறள் நூலானது, பேராசிரியர் ஜெயப்பிரகாஷ் மூலமாக தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மேலும், புகழ்பெற்ற எழுத்தாளர் சுந்தரராமசாமி எழுதிய 'ஒரு புளியமரத்தின் கதை நூலானது, கௌரி கிருபானந்தனால் தெலுங்கில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டு நூல்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.
- **நரிக்குறவர்-குருவிக்காரர் சமூகத்தினரை எஸ்.டி. பட்டியலில் சேர்க்க வலியுறுத்தல்**
  - நரிக்குறவர், குருவிக்காரர் சமூகத்தினரை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.
- **நீர் மேலாண்மை: தமிழகத்துக்கு தேசிய விருதுகள்**
  - ஒட்டுமொத்தமாக நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கிய மாநிலங்களின் பட்டியலில் முதலிடத்தை உத்தர பிரதேச மாநிலம் பிடித்தது.
  - இரண்டாம் இடத்தை ராஜஸ்தான் மாநிலம் பெற்றது. மூன்றாம் இடம் பிடித்த தமிழகத்துக்கு மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் விருது வழங்கினார்.
  - 2020- ஆம் ஆண்டு வழங்கப்பட்ட இரண்டாவது தேசிய நீர் விருதில், தமிழகம் முதலாவது இடத்தைப் பிடித்திருந்தது.
  - நீர் மேலாண்மையில் சிறந்த பள்ளிகள் பிரிவில் கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது.
  - சிறந்த ஊராட்சி பிரிவில் (தென் மண்டல அளவில்) செங்கல்பட்டு மாவட்டம் வெள்ளப்புதூர் ஊராட்சி இரண்டாம் பரிசு பெற்றது.
  - சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புப் பிரிவில் மதுரை மாநகராட்சிக்கு 3-ஆவது பரிசு கிடைத்தது.
- **திருநங்கைகள் கவுன்சில் உறுப்பினர் நியமனம்**
  - தேசிய திருநங்கைகள் கவுன்சில் உறுப்பினராக "தினமணி" விழுப்பரம் பதிப்பின் புகைப்படக் கலைஞர் என்.ராமமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனம்**
  - தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக வி.கீதாலட்சுமி நியமிக்கப்பட்டுள்ளார்.
- **நீதி ஆயோக்கின் ஏற்றுமதி தயார்நிலைக் குறியீடு - 2021**
  - இந்தப்பட்டியலில் குஜராத் தொடர்ந்து 2-வது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது. இதனைத் தொடர்ந்து, மகாராஷ்டிரம், கர்நாடகம், தமிழகம், ஹரியாணா, உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பஞ்சாப், ஆந்திர பிரதேசம் மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- **பந்தல்குடியில் பல்லுயிர் பெருக்க சுற்றுச்சூழல் பூங்கா**
  - அருப்புக்கோட்டை அருகேயுள்ள பந்தல்குடியில் சுண்ணாம்புக்கல் சுரங்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பல்லுயிர் பெருக்க சுற்றுச்சூழல் பூங்காவை தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் திறந்து வைத்தார்.
  - அதில் நீர்நிலைப்பாதை, வறண்ட நிலைதாவரமான கற்றாலை, அடியம்தோட்டம், பந்தல் பூங்கா, புல்வெளி, கல்பூங்கா வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் அடர்வனக் (மியாவாக்கி) காடுகளும் உருவாக்கப்பட்டுள்ளன.
- **சிறு-குறு நிறுவனங்களுக்கு கடன் பெற தனி இணையதளம்**
  - சிறு, குறு நிறுவனங்களுக்கு கடன் உத்தரவாதத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தனி இணையதளம் அமைக்கப்படுகிறது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- **நாட்டிலேயே முதல் முறையாக தூத்துக்குடியில் மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையம் தொடக்கம்**
  - நாட்டிலேயே முதல் முறையாக தூத்துக்குடி ஸ்பிக் நிறுவனத்தின் சார்பில் அமைக்கப்பட்ட மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையத்தின் செயல்பாட்டை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- **பேரிடர் மேலாண்மைக்கான முதல் மண்டல மாநாடு**
  - தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஒருங்கிணைப்பில் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் நடத்திய பேரிடர் மேலாண்மைக்கான முதல் மண்டல மாநாட்டை தமிழ்நாடு தலைமைச் செயலாளர் வி.இறையன்பு தொடங்கி வைத்தார்.
- **'நம் பள்ளி, நம் பெருமை' என்ற புதிய செயலி**
  - சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு விழா நினைவு நூலகத்தில், 'நம் பள்ளி, நம் பெருமை' என்ற பெயரிலான புதிய செயலி (App) ஒன்றை பள்ளிக் கல்வித்துறை வடிவமைத்துள்ளது. அதனை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி நேற்று அறிமுகப்படுத்தினார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- நம் பள்ளி; நம் பெருமை' என்ற திட்டத்தின் மூலம், ஏற்கெனவே உள்ள பள்ளி மேலாண்மைக் குழுவை எப்படி மேம்படுத்துவது, அது குறித்து எப்படி விழிப்புணர்வு ஏற்படுத்துவது என்பதற்கான திட்டமாகும்.

❖ **முதல்வரின் புத்தாக்கத் திட்டம்**

- தமிழக இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் திறமையை அரசுக்கு உதவும் வகையில் மேம்படுத்தும், முதல்வரின் புத்தாக்கத் திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது.
- இதில், இளைஞர்களுக்கு தொழில்முறை மற்றும் கல்வி அடிப்படையில் இரண்டு ஆண்டு காலம் ஊக்க ஊதியத்துடன் பயிற்சி வழங்கி, பின்னர் தேர்வு செய்யப்படும்
- இளைஞர்கள் முதல்வர் அலுவலம், தமிழக அரசின் முதன்மை திட்டங்களைச் செயல்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

❖ **திருகோணமலையில் சூரிய மின் உற்பத்தி மையம்**

- NTPC, சிலோன் மின்சார வாரியம், CEB இணைந்து சூரிய மின் உற்பத்தி நிலையத்தை திரிகோணமலையில் அமைப்பதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.

❖ **நீர்நிலைகள் ஆக்கிரமிப்பில் தமிழகம் முதலிடம்**

- நாட்டிலேயே அதிக அளவில் நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்ட மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. சுமார் 8,366 நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக மத்திய ஜல் சக்தி துறை இணையமைச்சர் விஸ்வேஷ்வர் துடு, மாநிலங்களவையில் தெரிவித்துள்ளார்.

❖ **சிக்கய்ய நாயக்கர் கல்லூரியை அரசே ஏற்க மசோதா தாக்கல்**

- சிக்கய்ய நாயக்கர் கல்லூரியை அரசே ஏற்க வகைசெய்யும் சட்டமசோதா பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாவை உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, தாக்கல் செய்தார்.
- இக்கல்லூரியானது பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் ஈரோட்டில் ஜூலை 12, 1954-ம் ஆண்டு மகாஜன கல்லூரி நிறுவப்பட்டது.
- 1959-ஆம் ஆண்டில் இந்தக் கல்லூரியானது சிக்கய்யநாயக்கர் மகாஜன கல்லூரி என பெயர் மாற்றப்பட்டது. அதன்பின்பு, 1970-இல் சிக்கய்ய நாயக்கர் கல்லூரி என மீண்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

❖ **தமிழக சட்டசபையில் முதல் பெண் துபாஷி நியமனம்**

- தமிழ்நாடு சட்டப்பேரவையில் துபாஷிகளாக ஆண்கள் மட்டுமே நியமிக்கப்பட்டு வந்தனர். தற்போது முதல்முறையாக துபாஷி பொறுப்பில் ராஜலட்சுமி என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஆங்கிலேயர் ஆட்சி காலத்தின் போது மொழிபெயர்ப்பாளராக துபாஷிகள் நியமிக்கப்பட்ட நிலையில், அதன்பிறகு சபாநாயகருக்கு உதவியாக துபாஷிகள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **செயற்கை நுண்ணறிவு நுட்பத்தில் "கேத் ஆய்வகம்"**
  - செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திலான கேத் ஆய்வகம் தமிழகத்திலேயே முதன்முறையாக சென்னையில் தொடங்கப்பட்டுள்ளது.

## வேளாண் நிதிநிலை அறிக்கை - 2022-2023

- தமிழக சட்டசபையில் தமிழகத்தின் 2-வது வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.தமிழக விவசாயத்துறை அமைச்சர் எம்ஆர்கே பன்னீர்செல்வம் 2-வது முறையாக தாக்கல் செய்தார்.
- கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்த ரூ.300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் மண் வளம் குறித்து அறிந்து கொள்வதற்காக 'தமிழ் மண் வளம்' என்ற தனி இணைய முகப்பு, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் இணைந்து உருவாக்கப்படும்.
- சிறுதானியங்கள் உற்பத்தியை ஊக்கப்படுத்த 2 சிறுதானிய சிறப்பு மண்டலங்கள்.
- முதல்வர் தலைமையில் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் சிறு தானியத் திருவிழா நடத்தப்படும்.
- சேலம், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, தர்மபுரி உள்ளிட்ட 4 மாவட்டங்களில் துவரை உற்பத்தி மண்டலங்கள் அமைக்கப்படும்.
- 381 கோடி ரூபாய் செலவில், திண்டிவனம், தேனி, மணப்பாறையில் உணவு பூங்காக்கள் அமைக்கப்படும்.
- திருவாரூர் மாவட்டத்தில் விளைபொருட்களுக்கு உரிய விலையைப் பெறுவதை உறுதிசெய்யும் வகையில் விவசாயப் பொருட்களுக்கான தொழிற்பேட்டை அமைக்கப்படும்.
- மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம் என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக 71 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- உழவர் சந்தைகள் காலையில் மட்டுமே செயல்படுகின்றன. சிறுதானியங்கள் விற்பனை செய்ய மாவட்டத்திற்கு ஒரு உழவர் சந்தை மாலையிலும் செயல்பட அனுமதிக்கப்படும்.
- மிளகு, காப்பிக் கொட்டைகளை தரம்பிரிக்கும் மையம் நீலகிரியில் அமைக்கப்படும்.
- தென்னை, மா, கொய்யா, வாழை உள்ளிட்டவை பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு 38,000 ஏக்கர் பரப்பளவில் 27.51 கோடியில் ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவித்தல் திட்டம் செயல்படுத்தப்படும்.
- தேனி, கோவை, குமரியில் பொது, தனியார் பங்களிப்புடன் மொத்த காய்கறி விற்பனை வளாகம் அமைக்கப்படும்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

# இந்திய நிகழ்வுகள்

❖ **ஸ்கோச் மாநில ஆளுமைத் தரவரிசை**

- 2021-ம் ஆண்டிற்கான ஸ்கோச் மாநில ஆளுமைத் தரவரிசையில், ஆந்திரப் பிரதேசம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

❖ **இ-விதான்**

- நாகாலாந்து, நாட்டிலேயே முற்றிலுமாக காகிதமில்லா சட்டமன்றம் மாறிய முதல் மாநிலம் ஆனது.
- இது தேசிய மின்-விதான் விண்ணப்ப (NeVA) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- NeVA, காகிதமற்ற முறையில் நாடாளுமன்ற நடவடிக்கைகளை நடத்த உதவுகிறது.

❖ **பிரதமரின் பாரதிய மக்கள் மருந்தகம்**

- 2015-ல் தொடங்கப்பட்ட பிரதமரின் பாரதிய மக்கள் மருந்தகம் மூலம் குறைந்த விலையில் மருந்துகள் விற்கப்பட்டு, இதுவரை ஏழை, நடுத்தர மக்களின் பணம் ரூ.13,000 கோடி வரை சேமிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

❖ **ஆந்திராவில் உருது இரண்டாம் மொழி**

- முதல்வர் ஒய்.எஸ்.ஜகன் மோகன் ரெட்டி தலைமையிலான ஆந்திர அரசு தெலுங்குடன் உருது மொழியை இரண்டாம் மொழியாக தேர்ந்தெடுப்பதற்கான சட்ட திருத்தத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளது.

❖ **பாரம்பரிய மருத்துவத்திற்கான மையம்**

- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை குஜராத்தில் உள்ள ஜாம்நகரில் WHO (உலக சுகாதாரம் அல்லது அமைப்பு) பாரம்பரிய மருத்துவத்திற்கான உலகளாவிய மையத்தை (WHO GCTM) நிறுவ ஒப்புதல் அளித்தது. இது தொடர்பாக உலக அமைப்புடன் இந்திய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.
- ஆயுஷ் (ஆயுர்வேதம், யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, சோவரிக்பா மற்றும் ஹோமியோபதி) சிறு முயற்சியின் கீழ் உருவாக்கப்படும் WHO GCTM, பாரம்பரிய மருத்துவத்திற்கான முதல் உலகளாவிய மையமாக இருக்கும்.

❖ **இந்தியாவின் முதல் பெண்கள் தொழில் பூங்கா**

- இந்தியாவின் முதல் பெண்கள் தொழில் பூங்கா ஹைதராபாத்தில் திறக்கப்பட்டது. இதனை மாநில அரசாங்கத்துடன் இணைந்து FICCI பெண்கள் அமைப்பு நடத்துகிறது.

❖ **சார்தாம் திட்டக் குழு**

- சார்தாம் பரியோஜனா "சார்தாம் யாத்திரை மையங்களுக்கு இணைப்பை (பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி) மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சார்தாம் திட்டக் குழுவின் தலைவராக முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி ஏ.கே.சிக்ரி நியமிக்கப்பட்டுள்ளார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **இந்தியாவின் மகப்பேறு இறப்பு விகிதம்**
  - தாய் மற்றும் குழந்தை ஆரோக்கியத்தில் கேரளா முதலிடத்தில் உள்ளது.
  - கேரளா , இந்தியாவிலேயே மிகக் குறைந்த தாய் இறப்பு விகிதத்தை (30 இறப்புகள்-ஒரு லட்சம் பிறப்புகளுக்கு) பதிவு செய்துள்ளது.
  - நாட்டின் மொத்த தாய் இறப்பு விகிதம் (MMR) 2017-19 காலகட்டத்தில் 103 ஆக முன்னேறியுள்ளது.
  - 2020-ம் ஆண்டிலேயே MMRன் ஐநாவின் நிலையான வளர்ச்சி இலக்குகளை கேரளா அடைந்துள்ளது. மகப்பேறு இறப்பு விகிதம் (MMR) என்பது 100000 உயிருள்ள பிறப்புகளுக்கு தாய் இறப்புகளின் எண்ணிக்கை என வரையறுக்கப்படுகிறது.
  - இந்தியாவில் குறைவான MMR உள்ள முதல் 3 மாநிலங்கள்:
    1. கேரளா
    2. தெலுங்கானா
    3. மகாராஷ்டிரா
  - மேற்கு வங்கம், ஹரியானா, உத்தரகாண்ட் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்கள் இப்பட்டியலில் கடைசியில் உள்ளன.

## திருவிழா

- **டோல் உத்சவ்**
  - டோல் உத்சவ் அல்லது டோல் ஜாத்ரா மேற்கு வங்கத்தில் கொண்டாடப்படுகிறது. இது வண்ணங்களின் திருவிழா ஆகும்'

## பொருளாதாரம்

- **தேசிய உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான நிதியுதவி வங்கி**
  - இந்த வங்கி RBI சட்டத்தின் கீழ் அகில இந்திய நிதி நிறுவனமாக மாற்றப்படும்.
  - இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934 - பிரிவுகள் 45L மற்றும் 45N கீழ் இது மாற்றப்பட உள்ளது.
  - தற்போது ரிசர்வ் வங்கியின் கீழ் உள்ள அகில இந்திய நிதி நிறுவனங்கள்
    1. எக்சிம் பேங்க் (EXIM Bank)
    2. நபார்டு (NABARD)
    3. தேசிய வீட்டுவசதி வங்கி (NHB)
    4. இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI)
- **செபி தலைவராக மாதவி புரி நியமனம்**
  - இந்திய பங்கு பரிவர்த்தனை ஒழுங்காற்று வாரியத்தின் தலைவராக மாதவி புரி புச் நியமிக்கப்பட்டுள்ளார். செபி தலைவராக பெண் ஒருவர் பதவியேற்பது இதுவே முதல்முறையாகும்.


CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **உலகின் வேகமான பொருளாதார வளர்ச்சி பெறும் நாடு இந்தியா**
  - இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2021-22 ஆம் நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில் 5.4 சதவீதமாக குறைந்துள்ளது. இருந்தபோதும், இதே கால கட்டத்தில் சீனாவின் 4 சதவீத ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) வளர்ச்சியைக் காட்டிலும் இந்தியா கூடுதல் வளர்ச்சி பெற்றுள்ளதோடு, உலகின் வேகமான பொருளாதார வளர்ச்சி பெறும் மிகப் பெரிய நாடு என்ற நிலையை தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டுள்ளது தெரியவந்துள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **சில்லறை பணவீக்கம் 6.07% அதிகரிப்பு**
  - நாட்டில் கடந்த பிப்ரவரி மாதத்தில் சில்லறை பணவீக்கம் 6.07 சதவீதமாகவும், மொத்த விலை குறியீட்டென் (WPI) அடிப்படையிலான பணவீக்கம் 13.11 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது.
- **இந்திய தங்க சுரங்கத்தின் உற்பத்தி 1.6 டன்**
  - இந்திய சுரங்கங்களிலிருந்து கடந்த 2020- ஆம் ஆண்டில் 1.6 டன் தங்கம் மட்டுமே வெட்டியெடுக்கப்பட்டுள்ளதாக உலக தங்க கவுன்சில் (WGC) தெரிவித்துள்ளது.
- **உலகின் மகிழ்ச்சியான நாடு பின்லாந்து**
  - உலகின் மகிழ்ச்சியான நாடு என்ற பெருமையைத் தொடர்ந்து 5-வது ஆண்டாக பின்லாந்து பெற்றுள்ளது. இந்தப் பட்டியலில் இந்தியா 3 இடங்கள் முன்னேறி 136-வது இடத்தைப் பிடித்துள்ளது.
  - உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலை ஐ.நா. நீடித்த வளர்ச்சிக்கான தீர்வுகள் அமைப்பு வெளியிட்டது.
  - மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP), ஆயுள்காலம், வாழ்வில் முடிவெடுப்பதற்கான சுதந்திரம், சமூக ஆதரவு, மக்களின் பெருந்தன்மை, ஊழல் உள்ளிட்டவை தொடர்பாக ஆராயப்பட்டது.
  - மார்ச் 20 - சர்வதேச மகிழ்ச்சி நாள்.
- **மகாத்மா காந்தி பச்சை முக்கோண பூங்கா**
  - மகாத்மா காந்தி பசுமை முக்கோண பூங்கா மடகாஸ்கரில் திறக்கப்பட்டுள்ளது. இது ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் கொண்டாட்டத்தைக் குறிக்கும் வகையில் திறக்கப்பட்டது.

## சுற்றுச்சூழல்

- **ஒட்டகப் பாதுகாப்பு கொள்கை**
  - ராஜஸ்தான் அரசு 'ஒட்டக பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக் கொள்கை'யை அறிவித்துள்ளது.
  - ஜூன் 22 அன்று உலக ஒட்டக தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - ஒட்டகங்கள், பாலைவன மக்களின் வாழ்வாதாரத்தில் முக்கியப் பங்கு வகிப்பதால் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - ராஜஸ்தானின் காலிபங்கன் என்ற இடத்தில் சிந்து சமவெளி நாகரிகத்தின் ஒட்டக எலும்புகள் முன்னர் கிடைக்கப்பட்டன.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **நீலகிரியில் அரிய வகை பட்டாம்பூச்சி இனம்**
  - ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நீலகிரியில் காணப்படாத அரிய வகை பட்டாம்பூச்சி இனம் ஸ்பாட்டட் ராயல் (தாஜூரியா மக்குலாட்டா), வைன்டர்பிளைத் சங்கத்தின் (WBA) உறுப்பினர்களால் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.
- **இந்தியாவில் புதிதாக கண்டறியப்பட்ட ஒரு கடல்பாசி**
  - அசிட்டா புலாரியா ஜலகான்யகே, இந்தியாவில் புதிதாக கண்டறியப்பட்ட கடல்பாசியாகும்.
  - இது பஞ்சாப் மத்தியப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த இந்திய அறிவியலாளர் குழுவால் அந்தமான் நிகோபர் தீவுத் திரளில் கண்டறியப்பட்டது.
- **வனவிலங்கு பத்திரம்**
  - இந்த பத்திரம் "ரைனோ பாண்ட்" என்றும் அழைக்கப்படுகிறது. இது உலக வங்கியால் வெளியிடப்பட்டது.
  - கருப்பு காண்டாமிருகத்தைப் பாதுகாப்பதற்கான தென்னாப்பிரிக்காவின் முயற்சிகளுக்கு ஆதரவாக இந்த பத்திரம் வெளியிடப்பட்டது.
  - "உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி" அமைப்பும் இதற்கு பங்களித்துள்ளது.

## அறிவியல் & தொழில்நுட்பம்

- **செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோடிக்ஸ் தொழில்நுட்பப் பூங்கா**
  - இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோடிக்ஸ் தொழில்நுட்பப் பூங்கா பெங்களூரில் தொடங்கப்பட்டது.
  - இதனை பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகம் அமைத்துள்ளது.
  - இது சுகாதாரம், கல்வி, உள்கட்டமைப்பு, விவசாயம், வணிகம் மற்றும் இணையப் பாதுகாப்பில் ஆராய்ச்சி திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது.
- **'AQVERIUM'**
  - இந்தியாவின் முதல் டிஜிட்டல் வாட்டர் பேங்க் 'AQVERIUM' பெங்களூரில் தொடங்கப்பட்டது. இது AquaKraft Group Ventures நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.
  - இது நீர் மேலாண்மையை சிறப்பிப்பதை நோக்கமாகக் கொண்ட முயற்சியாகும்.
- **கார்பன்-நியூட்ரல் விவசாய முறை**
  - கார்பன்-நியூட்ரல் விவசாய முறைகளை அறிமுகப்படுத்திய நாட்டிலேயே முதல் மாநிலமாக கேரளா மாற உள்ளது.
  - கார்பன் நியூட்ரல் விவசாய முறையானது, விவசாயத்தை உலகளாவிய கார்பன்-நடுநிலை எதிர்காலத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக மாற்றும் முயற்சி ஆகும்.
  - இது காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் ஒரு புதுமையான அணுகுமுறை ஆகும்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## முக்கிய நபர்கள் & நியமனங்கள்

❖ **மத்திய திரைப்பட சான்றளிப்பு வாரிய மண்டல அதிகாரி நியமனம்**

➢ மத்திய திரைப்பட சான்றளிப்பு வாரியத்தின் சென்னை மண்டல அதிகாரியாக சஞ்சய் கோஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ **IRDAI தலைவர் நியமனம்**

➢ காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையராக (IRDAI) இந்தியா முன்னாள் நிதி சேவை செயலாளர் தேபாசிஷ் பாண்டா தலைவராக நியமிக்கப்பட்டார்.

## திட்டம்

❖ **"யுவிகா"அல்லது இளம் விஞ்ஞானி திட்டம்**

➢ இத்திட்டத்தை, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) பள்ளி மாணவர்களுக்காக ஏற்பாடு செய்து வருகிறது.

➢ "யுவ விக்யானி கார்யக்ரம்" (யுவிகா) அல்லது "இளம் விஞ்ஞானி திட்டம்" என்று இத்திட்டம் அழைக்கப்படுகிறது.

➢ இது மே மாத கோடை விடுமுறையின் போது இரண்டு வாரங்களுக்கு மேல் நடத்தப்படும்.

➢ இத்திட்டத்தின் நோக்கம்:

1. வளர்ந்து வரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
2. அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகியவற்றில் ஆராய்ச்சியை ஊக்குவித்தல்

❖ **'நன்கொடை-ஓய்வூதியம்' திட்டம்**

➢ இது பிரதான் மந்திரி ஷிராம் யோகி மந்தான் (PM-SYM) ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், குடிமக்கள் பிரீமியம் தொகையை நன்கொடையாக வழங்கப்படும்.

➢ இதனை மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சகம் செயல்படுத்த உள்ளது.

❖ **ஆரோக்ய வனம் திட்டம்**

➢ குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், ராஷ்டிரபதி பவனில் 'ஆரோக்ய வனம்' திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

➢ இந்த திட்டத்தின் நோக்கம் ஆயுர்வேத தாவரங்களின் முக்கியத்துவம் மற்றும் மனித உடலில் அவை ஏற்படுத்தும் விளைவுகளை ஊக்குவிப்பது ஆகும்.

❖ **பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மான் தன் திட்டம்**

➢ பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மான்-தன் என்பது ஒரு ஓய்வூதியத் திட்டமாகும், இது இந்தியாவில் உள்ள அமைப்புசாரா வேலைத் துறை மற்றும் வயதானவர்களுக்கு நிதி பாதுகாப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மான்-தன் (PMSYM) பிப்ரவரி 2019 இல் பிரதமர் நரேந்திர மோடியால் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் கீழ் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டத்தின் நோக்கம் பயனாளிக்கு 60 வயதுக்குப் பிறகு ஒவ்வொரு மாதமும் 3000. மேலும், ஓய்வூதியத்தில் 50% பயனாளியின் மனைவிக்கு குடும்ப ஓய்வூதியமாக பயனாளி இறந்த பிறகு வழங்கப்படும்.
- இந்தத் திட்டம் உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது: தெரு வியாபாரிகள் ரிக்ஷா ஓட்டுனர்கள் விவசாயத் தொழிலாளர்கள் மதிய உணவு தொழிலாளர்கள் கட்டுமான தொழிலாளர்கள்.

### ❖ கௌசல்யா மாத்ரித்வா யோஜனா

- இத்திட்டம் பெண் குழந்தைகளின் வளர்ப்பு மற்றும் கல்விக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டது. இநதத் திட்டம் சத்தீஸ்கர் அரசால் தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்தின் கீழ், இரண்டாவது பெண் குழந்தை பிறந்தால் ரூ.5,000 வழங்கப்படும்.

### ❖ மாத்ருசக்தி உதய்மிதா திட்டம்

- பெண் தொழில்முனைவோருக்கு ஆதரவாக இருக்கும் என இத்திட்டத்தை ஹரியானா மாநில அரசு அறிவித்துள்ளது.
- குடும்ப ஆண்டு வருமானம் 5 லட்சம் ரூபாய்க்கு குறைவாக உள்ள பெண்களுக்கு, 3 லட்சம் ரூபாய் அளவுக்கு நிதி நிறுவனங்களால் மென் கடன்கள் வழங்கப்படும்.
- மேலும், ஹரியானா மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் 7% வட்டி மானியமும் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

### ❖ "முக்யமந்திரி சா ஸ்ராமி கல்யாண் பிரகல்பா" திட்டம்

- இத்திட்டத்தினை திரிபுரா அரசு, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக அறிவித்துள்ளது.
- இதன் மூலம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு, ரேஷன், நிதியுதவி ஆகியவற்றை உறுதி செய்யும்.
- இத்திட்டத்தினை மாநில அரசு மற்றும் மத்திய அரசு இணைந்து செயல்படுத்தும்.

## மாநாடுகள்

### ❖ உலக அமைதி மையம்

- இந்தியாவின் முதல் 'உலக அமைதி மையம்' குருகிராமில், அஹிம்சா விஸ்வ பாரதி அமைப்பு நிறுவ உள்ளது.
- இது உலகில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டு செயல்படும்.

### ❖ சமர்த் இயக்கம்

- இது பெண்களுக்கான சிறப்பு தொழில் முனைவோர் ஊக்குவிப்பு இயக்கம் ஆகும். இதனை, மத்திய சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகம் அறிமுகப்படுத்தியது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## பாதுகாப்பு

- **பிரமோஸ் ஏவுகணையின் நீட்டிக்கப்பட்ட இலக்கு சோதனை வெற்றி**
    - கப்பலில் இருந்து நிலப்பரப்பில் உள்ள இலக்கை துல்லியமாகதாக்கும் பிரமோஸ் சூப்பர்சானிக் ஏவுகணையின் நீட்டிக்கப்பட்ட இலக்கைத் தாக்கும் சோதனை வெற்றிகரமாக நடைபெற்றது.
    - 'ஐஎன்எஸ் சென்னை' போர்க் கப்பலில் இருந்து பிரமோஸ் சூப்பர்சானிக் ஏவுகணையைச் செலுத்தும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த சோதனையின் போது நீட்டிக்கப்பட்ட இலக்கை ஏவுகணை மிகத் துல்லியமாகத் தாக்கியது.
    - பிரமோஸ் ஏவுகணையும் அதனை ஏவிய 'ஐஎன்எஸ் சென்னை' போர்க்கப்பலும் உள்நாட்டிலேயே நவீன ஆற்றலுடன் தயாரிக்கப்பட்டவை என்பது கூடுதல் சிறப்பாகும்.

## கூட்டுப்பயிற்சி

- **சுரக்ஷா கவச் பயிற்சி**
    - இது இந்திய ராணுவம் மற்றும் மகாராஷ்டிரா காவல்துறைக்கு இடையேயான கூட்டுப் பயிற்சியாகும். இது இந்திய இராணுவத்தின் "அக்னிபாஸ் பிரிவு" மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.
- **20-வது வருணா பயிற்சி 2022**
    - இது இந்திய கடற்படைக்கும் பிரெஞ்சு கடற்படைக்கும் இடையிலான இருதரப்பு கடற்படை பயிற்சியாகும். இது அரபிக்கடலில் நடத்தப்படுகிறது
- **வாயு சக்தி பயிற்சி**
    - 2022-ம் ஆண்டிற்கான வாயு சக்தி பயிற்சி, ராஜஸ்தானின் ஜெய்சால்மரில் உள்ள பொக்ரான் மலைத்தொடரில் நடைபெறும். இந்தப் பயிற்சி இந்திய விமானப்படையால் நடத்தப்படுகிறது.

| பெயர் | நாடுகள் | பயிற்சி வகை | இடம் |
|---|---|---|---|
| கூட்டு கடற்படை பயிற்சி | இந்தியா & இலங்கை | கடற்படை பயிற்சி | விசாகப்பட்டினம் |
| இருதரப்பு ராணுவப் பயிற்சி | இந்தியா & ஜப்பான் | ராணுவப் பயிற்சி | பெல்காம் |



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## விருதுகள்

❖ **சர்வதேச தைரியமான பெண்கள் விருது**

- 2022 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க சர்வதேச தைரியமான பெண்கள் விருது,வங்கதேசத்தைச் சேர்ந்த ரிஸ்வானா ஹசன்-க்கு வழங்கப்படுகிறது.

❖ **ஆஸ்கர் விருதுகள் 2022**

- 'டியூன்' திரைப்படம் 6 விருதுகளை வென்றது.
- நடிகர் வில் ஸ்மித் முதல் முறையாக சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருதைப் பெற்றார்.
- சிறந்த நடிகருக்கான விருதை 'கிங் ரிச்சர்டு' திரைப்படத்தில் நடித்த வில் ஸ்மித் பெற்றார்.
- சிறந்த திரைப்படம்: கோடா

❖ **இந்திரா பார்த்தசாரதிக்கு சாகித்திய அகாடமியின் உயரிய அங்கீகாரம்**

- மூத்த தமிழ் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி, சாகித்திய அகாடமியின் உயரிய ஃபெல்லோஷிப் அங்கீகாரம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

❖ **“மகளிர் சக்தி புரஸ்கார்“ விருது - 2021**

- டாக்டர் ஆர். தாராவுக்கு 2021-ஆம் ஆண்டுக்கான மகளிர் சக்தி விருது வழங்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தின் நீலகிரி தோடர் இனப் பெண்கள் ஜெயமுத்து, தேஜம்மா ஆகியோர் சிக்கலான தோடரின எம்பிராய்டரி கொண்ட சால்வைகள் மற்றும் ஆடைகளை உருவாக்குவதற்காக இந்த மகளிர் சக்தி விருதை இணைந்து பெற்றனர்.
- நீலகிரி தோடரின மக்களின் கலைப் படைப்பான இது, பெண்களால் பிரத்யேகமாக செய்யப்படும் கைப்பின்னல் ஆகும்.

❖ **வுமன் டிரான்ஸ்ஃபார்மிங் இந்தியா விருதுகள் (இந்தியாவை மாற்றும் பெண்கள்)**

- இவ்விருதுகளை , NITI ஆயோக்கின் மகளிர் தொழில்முனைவோர் தளம் வழங்குகிறது.
- .இந்தியவின் சுதந்திரத்தின் 75 ஆண்டுகளைக் கொண்டாடும் வகையில், இந்த விருதுகள் 75 பெண் சாதனையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- இந்தியாவின் பெண் தலைவர்கள் மற்றும் மாற்றத்தை ஏற்படுத்துபவர்களின் முயற்சிகளை முன்னிலைப்படுத்த இந்த விருதுகள் வழங்கப்பட்டன.
- இவ்விருதுகள் 2018 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

❖ **உலக பாரா வில்வித்தை: பூஜாவுக்கு பதக்கம் வெள்ளி**

- துபையில் நடைபெற்ற உலக பாரா வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் மகளிர் தனிநபர் பிரிவில் இந்தியாவின் பூஜா ஜத்யன் வெள்ளிப் பதக்கம் வென்று வரலாறு படைத்தார்.

❖ **துப்பாக்கி சுடுதல்: இந்திய மகளிரணிக்கு தங்கம்**

- எகிப்தில் நடைபெறும் ஐஎஸ்எஸ்எஃப் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் அணிகள் பிரிவில் இந்தியாவுக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.

- **ஒலிம்பியாட் 2022 போட்டி தமிழக அரசு அறிவிப்பு**
  - சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பின் செஸ் ஒலிம்பியாட் 2022 போட்டி முதன்முறையாக இந்தியாவில், சென்னையில் நடைபெற உள்ளது.
  - சர்வதேச சதுரங்க கூட்டமைப்பு (FIDE) செஸ் ஒலிம்பியாட் 2022 சர்வதேச சதுரங்க போட்டியை சென்னையில் நடத்துவதற்கான ஏலத்தில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது.
- **பாரா தடகளம்: தேசாய்க்கு தங்கம்**
  - துபையில் நடைபெறும் பாரா தடகள கிராண்ட் ப்ரீ போட்டியில் ஓட்டப்பந்தய வீரர் பிரணவ் பிரசாந்த் தேசாய் தங்கப்பதக்கம் வென்றார். இப்போட்டியில் இந்தியாவுக்குக் கிடைத்த முதல் தங்கமாகும்
- **'மன்கட்டிங்" முறை ஏற்புடையது: விதிகளில் ஐசிசி (ICC) திருத்தம்**
  - "மன்கட்டிங்" என்பது, ஒரு பௌலர் பந்துவீச வரும்போதே "நான்-ஸ்டிரைக்கர்" பகுதியில் இருக்கும் போட்டர் கிரீஸ் கோட்டைத் தாண்டினால், பௌலர் பந்துவீசாமல் அவரை அப்படியே ரன்- அவுட் செய்யும் முறையை குறிப்பதாகும்.
  - 1948ல் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான தொடரில் இந்திய வீரர் "மன்கட்டிங்" என்பரால் இந்த முறை துவங்கப்பட்டது.

## புவிசார் குறியீடு

- **நரசிங்கம்போட்டை நாதஸ்வரத்துக்கு புவிசார் குறியீடு**
  - புகழ்பெற்ற நரசிங்கம்பேட்டை நாதஸ்வரத்துக்கு புவிசார் குறியீடுக்கான அங்கீகாரச்சான்று கிடைத்துளளது.
  - 1955-ம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டம் நரசிங்கம் பேட்டை கிராமத்தைச் சேர்ந்த ரங்கநாத ஆச்சாரி என்ற கைவினைக் கலைஞர், நாதஸ்வரத்தில் 'சுத்த மத்தியமம் ஸ்வரம்' என்பதைக் கண்டுபிடித்து, அதை நாதஸ்வர கருவியில் உருவாக்கினார்.
  - ராஜரத்தினம் பிள்ளை, காருக்குறிச்சி அருணாச்சலம் உள்ளிட்ட புகழ்பெற்ற நாதஸ்வர வித்வான்கள் பலர் நரசிங்கம்பேட்டை நாதஸ்வரத்தை வாசித்து பெரும் புகழ் பெற்றனர்.
  - இந்த நாதஸ்வரம் திராவிடர்களின் இசைக்கருவி என அழைக்கப்படுகிறது.

## புத்தகம்

- **தி ப்ளூ புக்**
  - இப்புத்தகம் வார்த்தைகளுடன் கூடிய ஓவியங்களாக அமைக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தை பத்திரிகையாளர் அமிதவ குமார் எழுதியுள்ளார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## முக்கிய தினம்

1. மார்ச் 1 - பூஜ்ஜிய பாகுபாடு தினம்
2. மார்ச் 1 - உலக குடிமைப் பாதுகாப்பு தினம்
3. மார்ச் 3 - உலக செவித்திறன் தினம்
4. மார்ச் 3 - உலக வனவிலங்கு தினம்
5. மார்ச் 4 - தேசிய பாதுகாப்பு தினம்
6. மார்ச் 8 - சர்வதேச பெண்கள் தினம்
7. மார்ச் 10 - உலக சிறுநீரக தினம்
8. மார்ச் 14 - நதிகளுக்கான சர்வதேச நடவடிக்கை தினம்
9. மார்ச் 14 - சர்வதேச கணித தினம்
10. மார்ச் 15 - உலக நுகர்வோர் உரிமைகள் தினம்
11. மார்ச் 16 - தேசியத் தடுப்பூசி தினம்
12. மார்ச் 18 - உலகளாவிய மறுசுழற்சி தினம்
13. மார்ச் 18 - ஆயுத தொழிற்சாலை தினம்
14. மார்ச் 20 - உலக சிட்டுக்குருவி தினம்
15. மார்ச் 21 - உலக வன நாள்
16. மார்ச் 21 - இனப் பாகுபாடு ஒழிப்புக்கான சர்வதேச தினம்
17. மார்ச் 21 - உலக "டவுன் சிண்ட்ரோம்" மரபணுநோய் விழிப்புணர்வு தினம்
18. மார்ச் 21 - உலக பொம்மலாட்ட தினம்
19. மார்ச் 22 - உலக தண்ணீர் தினம்
20. மார்ச் 23 - தியாகிகள் தினம் (ஷஹீத் திவாஸ் அல்லது சர்வோதய தினம்)
21. மார்ச் 23 - உலக வானிலை தினம்
22. மார்ச் 24 - உலக காசநோய் தினம்
23. மார்ச் 25 - கருவில் உள்ள குழந்தைக்கான சர்வதேச தினம்
24. மார்ச் 3 - சர்வதேச திருநங்கைகளின் தெரிவுநிலை தினம்
25. மார்ச் 31 - சர்வதேச போதைப்பொருள் சோதனை தினம்



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com